FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364124

1. District : இராமநாதபுரம் PS: உலகம் தலை மற்றும் கடல் காவல்நிலையம் Year: 2026 FIR No.: 5/2026 Date: 04.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7, 7(A)
(ii) Act சட்டம்: B.N.S.S., Sections பிரிவுகள்: 106
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.07.2026 Date to : 04.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 16.00 hrs Time to : 01.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 15.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol - II Time : 15.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 55 கிமீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : – (b) Address : கோரைக்குடி மாநகராட்சி அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : [redacted] (b) Father's/ Husband's Name [redacted]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 24.2.1984 (d) Nationality இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : அரசு ஊழியர் (g) Address : இராமநாதபுரம், மருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. [redacted] B. [redacted], உதவிப்பொறியாளர் (ஒப்பந்தம்) 2. [redacted] M. [redacted], மேலாளர் (பொறுப்பு) 3. [redacted] M. [redacted], மின் பொறுப்பாளர் (ஒப்பந்தம்) 4. [redacted], [redacted], உதவியாளர், கோரைக்குடி மாநகராட்சி) 5. [redacted], [redacted], [redacted] (நிரந்தர தூய்மை பணியாளர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 04.07.2026ம் தேதி 15.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் ஆய்வுக்குழு ஆய ஆய்வாளர், திரு.S.முத்துராமலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வான புகார் மனுவை பெற்று, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து, அன்னாரின் அனுமதி பெற்று 04.07.2026ம் தேதி 15.30 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2026 u/s 7, 7(A) of P.C Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and Sec. 106 B.N.S.S., 2023 ன்படி வழக்கு பதிவு செய்தேன்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. R.JESUDOSS Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS VAC, SIVAGANGAI on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4/7/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

A. Kannan
INSPECTOR
VAC
4/7/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.2026 at 17.00 hrs

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை INSPECTOR OF POLICE
VAC, SIVAGANGAI

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண். 5/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர்: திரு.S.முத்துராமலிங்கம், த/பெ.சக்திவேல், ஆய்வுக்குழு ஆய ஆய்வாளர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. நாள்: 04.07.2026, பொருள்: சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோருதல் தொடர்பாக, பார்வை: இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் (03.07.2026ம் தேதி 16.00 மணி முதல் 04.07.2026ம் தேதி அதிகாலை 01.00 மணி வரை). 03.07.2026ம் தேதி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து தொடர்புகொண்டு, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில், பொறியியல் பிரிவு, நகரமைப்புபிரிவு மற்றும் கணக்குப்பிரிவு ஆகிய பிரிவுகளில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பல்வேறு சேவைகளுக்காக மாநகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும் லஞ்சம் கேட்டுப்பெறுவதாகவும், மேலும் பொறியியல் பிரிவில் பணிபுரியும் உதவிப்பொறியாளர் திரு.சக்திவேல், வரைவாளர் திரு.மணிகண்டன், பணிமேற்பார்வையாளர் (ஓவர்சியர்) திரு.ஹரிஹரன் மற்றும் கணக்குப்பிரிவில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.முத்துமாரி ஆகியோர் ஒப்பந்ததாரர்களிடம் நேரடியாகவும், Phone pay / Google pay மூலமாகவும் ஒப்பந்தபணிகளுக்கு லஞ்சம் கேட்டுப்பெறுவதாகவும் கிடைக்கப்பெற்ற ரகசியதகவலின் பேரில், 03.07.2026ம் தேதி மாலை சுமார் 16.00 மணியளவில் காரைக்குடி முடியரசனார் சாலையில் அமைந்துள்ள, காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் ஆய்வுக்குழு ஆய ஆய்வாளராகிய என் முன்னிலையில், சிவகங்கை ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.அ.கண்ணன் மற்றும் குழுவினருடன் திடீர் இணைசோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது, மாநகராட்சி அலுவலகத்தின் பொறியியல் பிரிவு, நகரமைப்புபிரிவு மற்றும் கணக்குப்பிரிவில் இருந்த அலுவலர்களிடம் ஆய்வுக்குழுவினர் அறிமுகம் செய்து கொண்டு இந்த திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையில், பொறியியல் பிரிவு அலுவலகத்தில் தென்மேற்கில் அமைந்துள்ள உதவிப்பொறியாளர் (திட்டம்) அறையில் நுழைந்தபோது, அந்த அறையில் ஆய்வுக்குழுவினரை பார்த்தவுடன் பதற்றத்துடன் உதவிப் பொறியாளர் திரு.சக்திவேல் என்பவருக்கு முன்பிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த ஒப்பந்ததாரர் திரு.வயிரவன் வயது 41/2026, த/பெ.கண்ணப்பன், 29, செல்வ விநாயகர் கோவில் தெரு, அய்யர்பங்களா, மதுரை என்பவரை சோதனை செய்தபோது, அவரது பேண்டின் இடதுபக்க பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் இருந்து பணம் ரூ.740/- மற்றும் இடதுபக்க சட்டைப்பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.1190/- ஆகமொத்தம் ரூ.1930/- ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் தனது கை செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். எனவே,

மேற்படி பணம் ரூ.1930/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவரை சோதனை செய்தபோது, அவரது வலது பக்கபேண்ட் பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் நோட்டுக்களாக கத்தையாக இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 65 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.32,500/- இருந்தது. அவரிடம் அந்தப்பணம் குறித்தும், உதவிப்பொறியாளர் திரு.சக்திவேலை சந்திக்க வந்ததற்கான காரணம் குறித்தும் விசாரித்தபோது, அவர் காரைக்குடி மாநகராட்சியில் 7 வார்டுகளில் 24/7 Water Supply திட்டப்பணியினை டெண்டர் எடுத்து வேலை செய்துவருவதாகவும், அது சம்மந்தமாக உதவிப்பொறியாளர் திரு.சக்திவேல் என்பவரை சந்திக்க வந்ததாகவும் கூறினார். அவர் மேற்படிபணம் ரூ.32,500/- (ரூபாய் முப்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) குறித்து சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தினால், அந்தப்பணத்தினை அவர் உதவிப்பொறியளர் திரு.சக்திவேல் என்பவருக்கு அவரது ஒப்பந்த பணிக்காக லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக கருதி, அவரிடமிருந்து மேற்படி பணம் ரூ.32,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, உதவிப்பொறியாளர் அறையிலிருந்த திரு.B.சக்திவேல், 54/2026, த/பெ.பாலசுப்பிரமணியன், உதவிபொறியாளர் (திட்டம்) என்பவரை சோதனை செய்தபோது, அவரது இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சில் பணம் ரூ.900/- (ரூ.100/- X 9) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் போக்குவரத்து செலவு மற்றும் மெடிக்கல் பேஸ்ட் வாங்குவதற்காக வைத்திருந்த அவரது சொந்தப்பணம் என்று கூறியதால், மேற்படிபணம் ரூ.900/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் விசாரணைக்காக கேட்டதன் பேரில் உதவிப்பொறியாளர் (திட்டம்) திரு.சக்திவேல் ஆஜர் செய்த, 1) Providing 24X7 Water Supply to the selected Zone என்கிற பணி தொடர்பான கோப்பு, 2) பொறியியல் பிரிவு பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2026 மற்றும் 3)Contractor Registration 2025 -26 to 2027-28 பதிவேடுஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, பொறியியல் பிரிவு அலுவலகத்தில், மாநகர பொறியாளர் அறையில் இருந்த M.ஹரிஹரன்,வயது 36/2026, த/பெ.முருகன், பணிமேற்பார்வையாளர் என்பவரை சோதனை செய்தபோது, அவரது மணிபர்சில் பணம் ரூ.2,240/- இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் வாகன செலவுக்காக வைத்திருந்த அவரது சொந்தப்பணம் என்று கூறியதால், மேற்படிபணம் ரூ.2,240/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவரது One Plus அலைபேசியின் செல் நம்பர் எண்.97905 60212-ன் GPay பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, அவர் கீழ்க்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடம் சந்தேகத்திற்கிடமான முறையில் பணம் பெற்றுள்ளது தெரியவந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனைக் காலம்	மொத்தபரிவர்த்தனைதொகை (ரூ)
1	செந்தில்குமார் 9944466484	அக்டோபர் 2022 முதல் ஜனவரி 2026 வரை	89,000/-
2	பிரதீப் R +91.....9933	ஜீலை 2026	4,000/-
3	ராம்கார்த்திக் ராம் +91.....3571	பிப்ரவரி 2024	5,000/-
4	K.S.செந்தில்குமார்	ஏப்ரல் 2024 முதல் ஆகஸ்ட் 2025 வரை	14,000/-
மொத்தம்			1,12,000/-

அவரிடம் மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடம் பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளதற்கான காரணம் கேட்டதற்கு, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து மடிக்கணிணி மூலம் பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, பொறியியல் பிரிவு அலுவலகத்தில் இருந்த வரைவாளர் (Draftsman) திரு.M.மணிகண்டன், 37/2026, த/பெ.மகராசன் என்பவரை சோதனை செய்தபோது, அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.720/-யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்த சொந்தப் பணம் என்று கூறியதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது VIVO Y200 5G என்ற அலைபேசியின் செல் நம்பர் 89731 75556-ன் GPay பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, அவர் கீழ்க்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடம் சந்தேகத்திற்கிடமான முறையில் பணம் பெற்றுள்ளது தெரியவந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனைக் காலம்	மொத்தபரிவர்த்தனைதொகை (ரூ)
1	சண்முகராஜா +91.....7968	டிசம்பர் 2025 முதல் மே 2026 வரை	27,000/-
2	செந்தில் குமார் 9944466484	மார்ச் 2023 முதல் ஏப்ரல் 2026 வரை	7,68,000/-
3	Lovely AK 7548853806	மார்ச் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை	30,000/-
4	சரவணன் முனியாண்டி +91.....9358	ஜீன் 2023 முதல் ஏப்ரல் 2026 வரை	25,000/-
5	வெங்கடாஜலபதி 8838556003	மே 2023 முதல் ஏப்ரல் 2026 வரை	50,000/-
6	பிரதீப் R9843467477	ஆகஸ்ட் 2023 முதல் மார்ச் 2026 வரை	40,000/-

வ. எண்	பெயர்	பரிவர்த்தனைக் காலம்	மொத்தபரிவர்த்தனைதொகை (ரூ)
7	Carbon Loops Private Limited 9841988312	ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2026 வரை	75,000/-
8	K.சாரதி9884324324	ஜீலை 2023 முதல் மார்ச் 2026 வரை	59,000/-
9	விக்னேஸ்கண்ணா கணேசன் +91.....3377	ஜனவரி 2026	10,000/-
10	அருள்ராஜப்பன் ஜோசப் 9994470780	ஜனவரி 2026	5,000/-
11	Ks செந்தில்குமார் 9442254477	மார்ச் 2023 முதல் நவம்பர் 2025 வரை	3,25,000/-
மொத்தம்			14,14,000/-

அவரிடம் மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடம் பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளதற்கான காரணம் கேட்டதற்கு, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து மடிக்கணிணி மூலம் பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, கணக்குப்பிரிவில் சோதனை செய்தபோது, அங்கிருந்த B1 பிரிவு உதவியாளர் திருமதி.T.முத்துமாரி, 46/2026, த/பெ.தொண்டிராஜ் என்பவரை சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு சார்பு ஆய்வாளர் திருமதி.K.கோகிலா என்பவரால் சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.180/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் கை செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.180/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது Oppo 11 Pro என்ற அலைபேசியின் செல் நம்பர் 97504 86308-ன் GPay பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, அவர் கீழ்க்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடம் சந்தேகத்திற்கிடமான முறையில் பணம் பெற்றுள்ளது தெரியவந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை தேதி	மொத்தபரிவர்த்தனைதொகை (ரூ)
1	D.செந்தில்குமார் 9944466484	19.12.2025	15,000/-
2		10.10.2025	15,000/-
3		01.11.2025	15,000/-
4	KS.செந்தில்குமார் 9442254477	23.07.2025	3,000/-
		மொத்தம்	48,000/-

அவரிடம் மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடம் பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளதற்கான காரணம் கேட்டதற்கு, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து மடிக்கணிணி மூலம் பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் விசாரணைக்காக கேட்டதன் பேரில் அவர் ஆஜர் செய்த காரைக்குடி மாநகராட்சி நிர்வாகப்பிரிவின் 2026ம் ஆண்டு வருகைப்பதிவேட்டினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையில், நகரமைப்புபிரிவில் சோதனை மேற்கொண்டபோது, அங்கிருந்த நகரமைப்பு ஆய்வாளர் திரு.மு.தாமரைச்செல்வன், வயது 51/2026,

த/பெ.முனுசாமி என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.1,600/- மட்டும் இருந்தது. மேற்படிபணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் அந்தப்பணம் மருத்துவ செலவு மற்றும் சாப்பாடு செலவிற்கும், இருசக்கர வாகனத்திற்கென வைத்திருந்ததாகவும் கூறினார். எனவே, மேற்படிபணம் ரூ.1,600/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவு, நகரமைப்புபிரிவு மற்றும் கணக்குப்பிரிவில் பணியிலிருந்த 1) திரு.B.சக்திவேல், உதவிப்பொறியாளர் (திட்டம்), 2) திரு.M.மணிகண்டன், வரைவாளர்,3) திரு.M.ஹரிஹரன், பணிமேற்பார்வையாளர், 4) திருமதி.T.முத்துமாரி, உதவியாளர், 5) திரு.மு.தாமரைச்செல்வன், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் 6) கண.வயிரவன் ஒப்பந்ததாரர் (தனியர்) ஆகியோரை ஆய்வுக்குழு ஆய ஆய்வாளராகிய என் முன்பாக விசாரிக்கப்பட்டு, வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை தொடர்பான செயல்முறை நடவடிக்கை குறிப்புகள் 04.07.2026-ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் இணை சோதனையின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.32,500/-, ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் சோதனை சம்மந்தமாக 1) திரு.சக்திவேல், உதவிபொறியாளர் (திட்டம்), 2) திரு.M.மணிகண்டன், வரைவாளர், 3) திரு.M.ஹரிஹரன், பணிமேற்பார்வையாளர், 4) திருமதி.T.முத்துமாரி, உதவியாளர் மற்றும் 5)கண.வயிரவன் ஒப்பந்ததாரர் (தனியர்) ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு. இப்படிக்கு ஒப்பம் S.முத்துராமலிங்கம்.

Sir, Received the complaint on 04.07.2026 at 15.00 hrs. Found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime No. 5/2026 u/s 7, 7(A) of P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and Sec. 106 B.N.S.S., 2023 on 04.07.2026 at 15.30 hrs. Sd. A.Kannan, Inspr/V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
4/7/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Sivagangai